**செய்தி வெளியீடு எண்: 963** **நாள்: 29.12.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

## <u>பதிவுசெய்யப்பட்டு திரும்ப வழங்கக்கூடிய ஆவணங்களை உரிய நபரிடம் பதிவு செய்யப்பட்ட அன்றே வழங்கும் புதிய வசதி</u>

பதிவுத்துறைக்கான ஒருங்கிணைந்த வலை அடிப்படையிலான ஸ்டார் 2.0 திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.2.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டு 27.12.2018 அன்றுவரை **22,05,870** ஆவணங்கள் மென்பொருள் வழி பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஸ்டார் 2.0 திட்டத்தின் மைய நோக்கம் என்பது குறித்த நேரத்தில் வரிசைக்கிரமாகவும் விரைவாகவும் பாகுபடற்ற சேவைகளை வெளிப்படையாக பொதுமக்களுக்கு வழங்குவதே ஆகும். இந்த நோக்கத்திற்கு ஏற்ப **17.12.2018** முதல் பதிவு செய்து அன்றே திரும்பி வழங்கக்கூடிய ஆவணங்களை (Documents returnable on same day) உடனுக்குடன் ஒளிவருடல் செய்து பொதுமக்களுக்கு வழங்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த நடைமுறை சிறப்பாக செயல்படுத்தப்பட்டு தற்போதுவரை ஏறக்குறைய 60 விழுக்காடு வரையிலான ஆவணங்கள் பதிவு செய்த அன்றைய தினமே திரும்ப வழங்கப்பட்டுள்ளது. இந்த விழுக்காடு தினந்தோறும் அதிகரித்து வருகிறது.

அன்றே திரும்ப வழங்கக்கூடிய ஆவணங்களைப் பொறுத்து பதிவுப்பணிகள் நிறைவடைந்தவுடன் ஆவணம் திரும்பப் பெற அங்கீகாரம் பெற்ற நபரின் விரல்ரேகையைப் பதிவு செய்து

Verified RealEstate™

உடனுக்குடன் ஆவணத்தை பொதுமக்கள் பெற்றுச்செல்ல கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இதில் பொதுமக்களுக்கு ஏதும் சிரமங்கள் இருப்பின் பதிவுத்துறைத் தலைவர் அலுவலக கட்டணமில்லா தொலைபேசி எண்.**1800 102 5174**-ஐ தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

Verified RealEstate™